2024 – டிசம்பர் மாதம் 05–ஆம் தேதி வியாழக்கிழமை

தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பெரம்பலூர்.

***எம் சி ஓ பி நெம்பர்*** : 295 / 2023

*2024 – ம் ஆண்டு டிசம்பர் மாதம் 05–ஆம் தேதி வியாழக்கிழமை மனுதாரர்/எதிர்மனுதாரரர் தரப்பு சாட்சியாகிய P W 1, வது நபரின் வாக்குமூலம் (1969–ஆம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி. N. லலிதா, Gr.II Bench Clerk அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.*

| | | |
|---|---|---|
| பெயர் | : | P W 1, தங்கராசு |
| தகப்பனார் பெயர் | : | மாசி |
| ஊர் | : | நெ. 268, முல்லைநகர், கீழக்கணவாய் கிராமம், |
| வட்டம் | : | பெரம்பலூர் |
| மாவட்டம் | : | பெரம்பலூர் |
| தொழில் | : | கூலிவேலை |
| வயது | : | 57 |

***தேதி : 05.12.2024.***

***முதல் விசாரணை :–***

நான் இந்த மனுவில் மனுதாரர் ஆவேன். மனு விபரங்கள் குறித்து நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கின்றேன். நான் இன்று தாக்கல் செய்யும் என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விபரங்களை நன்கு தெரிந்து கையொப்பம் செய்துள்ளேன். அதை என் சாட்சியமாக ஏற்கவேண்டுகின்றேன். எனது தரப்பில் தாக்கல் செய்யப்படும் கீழ் கண்ட ஆவணங்களை மனுதாரர் தரப்பு சான்றாவணங்களாக குறியீடு செய்து கொள்ள வேண்டி பிரார்த்திக்கின்றேன்.

**எனது சார்பாக :–**

**1).** 11.07.2023–ம் தேதியிட்டு பெரம்பலூர் காவல் நிலைய குற்ற எண் 533 / 2023–ன் கீழ் இதச பிரிவுகள் 279, 337 –ன் படி பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் உண்மை நகல் **ம.சா.ஆ.1.**

2). பெரம்பலூர் அரசு தலைமை மருத்துவமனையில் இருந்து என் பெயருக்கு வழங்கப்பட்ட விபத்து பதிவேடு நகல் **ம.சா.ஆ.2,**

3). 12.07.2023 முதல் 15.07.2023 வரை பெரம்பலூர் பிரியம் தனியார் மருத்துவமனையில் இருந்து என் பெயருக்கு வழங்கப்பட்ட மருத்து விடுவிப்பு சான்று அசல் **ம.சா.ஆ.3.**

4).பெரம்பலூர் பிரியம் மருத்துவமனையில் இருந்து என் பெயருக்கு வழங்கப்பட்ட மருத்துவ பில்கள் 49– எண்ணிக்கைகள் கொண்டது, ரூ.82,416/–க்கானது அசல் **ம.சா.ஆ.4. (2–ம் எதிர்மனுதாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரின் ஆட்சேபனையின் பேரில் குறியீடு செய்யப்படுகின்றது)**

5).1–ம் எதிர்மனுதாரரின் வாகனத்தின் பதிவு புத்தகத்தின் ஜெராக்ஸ் நகல் **ம.சா.ஆ.5.**

6). 1–ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் வாகன காப்பீட்டு நகல் **ம.சா.ஆ.6,**

7). 1–ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநரின் ஓட்டுநர் உரிமம் ஜெராக்ஸ் நகல் **ம.சா.ஆ.7,**

8). எனது ஆதார் அட்டையின் ஜெராக்ஸ் நகல் அசலுடன் சரிபார்க்கப்பட்டு குறியீடு செய்யப்படுகின்றது அது **ம.சா.ஆ.8.**

எனக்கு வழங்கப்பட்ட ஊனச்சான்று **நீ.ம.சா.ஆ.1** ஆகும்.

ஆக தாக்கல் செய்கின்றேன். எனது சாட்சியம் மற்றும் ஆவணங்களை ஏற்றுக்கொண்டு மனுப்படி உத்தரவாக வேண்டுகின்றேன்.

**குறுக்கு விசாரணை ( 2–ம் எதிர்மனுதாரர் தரப்பில் )**

விபத்து எந்த தேதியில் நடைபெற்றது என்றால் 7–வது மாதம், 10–ம் தேதி விபத்து நடைபெற்றது வருடம் தெரியவில்லை. நான் இருசக்கர வாகனத்தில் சென்றேன். எனது வாகனத்தின் பதிவு எண் 5304 ஆகும். அந்த வாகனம் டிவிஎஸ் வாகனமாகும். அந்த வாகனத்தின் உரிமையாளர் நான் தான் என்றால் சரிதான். அந்த வாகனம் சம்மந்தப்பட்ட ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லையென்றால் சரிதான். எனது ஓட்டுநர் உரிமத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை, ஏன் தாக்கல் செய்யவில்லையென்றால் விபத்து சமயத்தில் தொலைந்து விட்டது. அவ்வாறு தொலைந்து விட்டது சம்மந்தமாக எந்த வித நடவடிக்கையும் எடுக்கவில்லையென்றால் சரிதான்.

தற்போது எனக்கு 55 வயதாகின்றது. விபத்து சமயத்திலும், விபத்து பதிவேட்டிலும் எனக்கு வயது 56 என குறிப்பிட்டிருந்தால் அது தவறு என்றால் நான் மயக்கத்தில் இருந்ததால் தெரியவில்லை. புகார் நான் தான் கொடுத்தேன். புகாரில் என் வயது தவறுதலாக குறிப்பிடப்பட்டுள்ளது என்று நான் சொல்லவில்லை. அதே போன்றே எனது முதல் விசாரணையிலும் வயது தவறாக உள்ளது என்று சொல்லப்படவில்லை என்றால் சரிதான். விபத்து நடந்த போது காலை சுமார் 09.00 மணியிருக்கும். நான் குடியிருக்கும் வீடு கீழக்கணவாய் கிராமத்தில் உள்ளது. விபத்து சமயத்தில் என்னுடைய ஊரில் இருந்து தான் நான் வந்தேன். அந்த விபரத்தை நான் எனது புகாரில் சொல்லியுள்ளளேனா என்றால் அவர்கள் கேட்காததால் நான் சொல்லவில்லை. போலீசார் கேட்டார்கள் என்றும், நான் அவர்கள் கேட்கவில்லையென பொய் சொல்கின்றேன் என்றால் சரியல்ல.போலீசார் நான் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த போது வந்து விசாரித்தார்கள். நான் அரசு மருத்துவமனையில் 2 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தேன். அதன் பிறகு பெரம்பலூர் பிரியம் மருத்துவமனையில் நான் அரசு மருத்துவமனையில் இருந்து விடுவிக்கப்பட்ட பின்னர் 2 நாட்கள் கழித்து சிகிச்சைக்கு சேர்ந்தேன். பெரம்பலூர் பிரியம் மருத்துவமனையில் நான் அரசு மருத்துவமனையில் இருந்து விடுவிக்கப்பட்ட பின்னர் 2 நாட்கள் கழித்து சிகிச்சைக்கு சேர்ந்துள்ளதாக கூறினேன், அதற்கான ஆவணங்களை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லையென்றால் சரிதான். நான் ஓட்டுநர் உரிமம் எந்த வருடம் எடுத்தேன் என்பது ஞாபகம் இல்லை. என்னுடைய இருசக்கர வாகனத்தை வாங்கி 10, 15 வருடங்களுக்கு மேலாக இருக்கும் என்றால் சரிதான். அந்த வாகனத்தை வட்டாரப்போக்குவரத்து அலுவலகத்தில் 10, 15 வருடங்களுக்கு மேலாக ஓட்டி வருவதை தெரிவித்து தகுதிச்சான்று பெற்றுள்ளேனா என்றால் இல்லை, அது சம்மந்தப்பட்ட ஆவணங்களையும் தாக்கல் செய்யவில்லையென்றால் சரிதான். எனது வாகனத்தை காப்பீடு செய்துள்ளேன். அந்த ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல்

செய்துள்ளேனா என்றால் இல்லை. விபத்து சம்மந்தமாக வேறு ஏதேனும் உதவிகள் பெற்றுள்ளேனா என்றால் இல்லை. நான் பொய்யாக சொல்கின்றேன் என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய வாகனத்திற்கும், எனக்கும் ஏற்பட்ட இழப்பீட்டை பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. அதை மறைப்பதற்காக அந்த ஆவணங்கள் எதையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனது வாகனத்திற்குறிய காப்பீட்டு நிறுவனத்தை வழக்கில் ஒரு தரப்பினராக சேர்க்காததற்கு தனிப்பட்ட காரணம் எதுவும் இல்லையென்றால் சரிதான். மேற்படி சங்கதி குறித்து என்னுடைய மனுவிலும், முதல் விசாரணையிலும், சாட்சியத்திலும் சொல்லப்படவில்லையென்றால் சரிதான். விபத்து நடந்த இடம் வாகனங்கள் போய் வந்து கொண்டிருக்கும் அகலமான தேசிய நெடுஞ்சாலை என்றால் சரிதான். செஞ்சேரி கிராமம் துறையூர் மெயின் ரோட்டில் அமைந்துள்ளது என்றால் சரிதான். செஞ்சேரி கிராமத்திற்கும், விபத்து நடந்த இடத்திற்கும் சம்மந்தம் இல்லை. சொக்கநாதபுரத்திற்கும், கீழக்கணவாய் கிராமத்திற்கும் சம்மந்தம் இல்லையென்றால் சரிதான், நான் வேலைக்கு செல்லும் போது விபத்து ஏற்பட்டது. விபத்து சாலையின் நடுவில் ஏற்பட்டது என்றால் நான் சாலையின் ஓரமாக வந்து வண்டியுடன் காத்துக்கொண்டிருந்தேன். அந்த சமயத்தில் நானும், மற்றொரு நபரும் எனது வண்டியில் அமர்ந்திருந்தோம். நான் மேற்கில் இருந்து கிழக்கு நோக்கி வந்து நின்று கொண்டிருந்தேன். என் மீது மோதிய கார் என் வண்டியின் பின்பகுதியில் மோதிவிட்டது. அந்த கார் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி வந்தது. எனது வண்டிக்கு சேதம் ஏற்பட்டது. வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்கு கொண்டு சென்றேனா என்றால் கொண்டு சென்றேன். அதற்கான ஆய்வறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. என் மீது மோதிய காருக்கு எந்த பகுதியில் சேதம் ஏற்பட்டது என்று நான் பார்க்கவில்லை. நான் பிரேக் பிடிக்காமல் வேகமாக ஓட்டி சென்று காரின் இடது பக்கத்தில் மோதி சேதம் ஏற்படுத்திவிட்டேன் என்றும் கார் என்னுடைய வாகனத்தின் மீது

மோதவில்லை என்று சொன்னால் சரியல்ல. விபத்து சாலையில் நடுப்பகுதியில் தான் நடந்தது என்றும் நான் ஓரமாக இருந்ததாக பொய் சொல்கிறேன் என்றும் மாதிரி வரைபடத்திலும் விபத்து சாலையின் நடுப்பகுதியில் நடந்துள்ளதாகவே குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் சொன்னால் சரியல்ல. என் வயதினை காட்டுவதற்கு உண்டான ஆவணமும் நான் வேலை செய்து வருவதற்கான ஆவணமும் வருமானத்தை காட்டுவதற்கான ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. அதனால்தான் நான் தாக்கல் செய்துள்ள மனுவில் ரூ.15,000/- வருமானம் என்றும் முதல் விசாரணையில் நிரூபண வாக்குமூலத்தில் ரூ.20,000/- வருமானம் என்றும் முன்னுக்குபின் முரணாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி வரும்போது எனக்கு வலதுபக்கம் கொடி கம்பங்கள் இருந்தது என்றால் இல்லை. விபத்து உண்மையிலேயே நடந்திருந்தால் விபத்து பகுதியில் கொடி கம்பங்கள் இருந்த விவரம் எனக்கு தெரிந்திருக்கும் என்றும் கொடி கம்பங்கள் விபத்து பகுதியில் இல்லை என்று சொல்வதால் அந்த பகுதியில் விபத்து நடைபெறவில்லை என்று சொன்னால் சரியல்ல.எ னக்கு தெரிந்த செல்வாக்கை பயன்படுத்தி வழக்கினை பதிவு செய்ய வைத்துள்ளேன் என்றும் சொன்னால் சரியல்ல. இந்த விபத்திற்கு 1-ம் எதிர்மனுதாரரின் வாகனம் காரணம் இல்லை என்றும் அதனால் 2-ம் எதிர்மனுதாரர் காப்பீட்டு நிறுவனம் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டது இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. நான் எனக்கு ஏற்பட்ட காயங்களுக்கு இன்றைய தேதி வரை தொடர்சிகிச்சை மேற்கொண்டு வருவதற்கான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. ஆவணங்கள் உள்ளன. அந்த ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. மனு 2-ம் எதிர்மனுதாரரைப் பொறுத்து தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

**மறு விசாரணை:- இல்லை.**

ஒப்பம் /- சி. சங்கர்,
தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,
பெரம்பலூர்.